ராஜராஜ சோழனுக்குப் பிறகு அதிக குடமுழுக்குகள் கண்ட – ஒரு மாமன்னர், எங்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!

தகுதியிழந்த தற்குறிக் கூட்டமாகத்தான் த.வெ.க. ஆட்சி திகழ்கிறது!

முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பேட்டி!

சென்னை, ஆக.4– சென்னை கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டம் நிறைவுற்றதும், மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபுவை செய்தியாளர்கள் சந்தித்தார்.

அப்போது அவர்களுக்குப் பேட்டியளித்த பி.கே.சேகர்பாபு, "ராஜராஜ சோழனுக்குப் பிறகு அதிக குடமுழுக்குகள் கண்ட – ஒரு மாமன்னர், எங்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்" அவர்கள் என்று குறிப்பிட்டார்.

அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

த.வெ.க. அரசின் அஜெண்டா வெறும், திராவிட முன்னேற்றக் கழகத்தைக் குறை சொல்வது மட்டுமே. அதைத் தவிர்த்து அவர்களால் வேறு எந்தக் குற்றச்சாட்டையும் கூற முடிவதில்லை.

இன்றைக்குத் தட்டுத்தடுமாறி தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்திருக்கின்ற முதலமைச்சர் அவர்கள், நாள்தோறும் பார்வையிடுகின்ற ஒவ்வொரு திட்டங்களும் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் இருந்த காலத்தில் வடிவமைக்கப்பட்ட திட்டங்கள்தான்.

அதேபோல், தொடங்கப்படுகின்ற ஒவ்வொரு திட்டங்களும் அவர் ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டவைதான். ஒரே ஒரு திட்டத்திற்காவது அடிக்கல் நாட்டுகின்ற அளவிற்குக்கூட அவருடைய செயல்பாடு அமையவில்லை. எனவே, முழுவதும் தகுதியிழந்த தற்குறிக் கூட்டமாகத்தான் இந்த ஆட்சி திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

கேள்வி: இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், யார் தனிமையில் இருக்கிறார் என்று ஸ்டாலின் சாரிடம் கேட்டால் தெரியும் என்று சொல்கிறாரே!

பதில்: தனிமையில் இருப்பது யார் என்பதை உலகமே நன்றாக அறியும். குடும்பத்தோடு இருப்பவர் எங்களுடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி அவர்கள். குழந்தைகள், மனைவி இல்லாமல் தனிமையில் இருப்பது யார் என்பதை நாங்கள் சொல்லி நாடு தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இல்லை.

எங்களுடைய முதலமைச்சர் அவர்கள், நான் இப்போது எடுத்துக் கூறியது போன்று ஒரு ஆலமரம் போன்றவர். அருகம்புல் ஆலமரத்தைப் பழிக்கின்றது.

காவேரி நதிநீர்ப் பிரச்சினையில் கூட அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட மாட்டேன்; நான் தனி மனிதனாக ஆவர்த்தனம் செய்வேன், கர்நாடகத்திற்குச் செல்வேன் என்று அறிவித்த முதலமைச்சர் அவர்களை, கர்நாடகமும் ஏற்றுக்கொள்ளவில்லை; இங்குள்ள எந்தக் கட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை. தனிமைப்படுத்தப்பட்டது யார் என்பதை மக்களின் முன்பாகக் கேள்வியாக வைப்போம். எங்கள் முதலமைச்சர் மக்களின் தலைவர்.

4-ஆம் தேதி அவர் வெற்றி வாய்ப்பை இழக்கின்றார். ஐந்தாம் தேதி நன்றி சொல்ல வருகின்ற பொழுது, மக்கள் கண்ணீர்க் கடலில் மிதந்து வந்த மக்கள் தலைவர் எங்கள் முதலமைச்சர் அவர்கள். ஆட்சிப் பொறுப்பிற்கு வந்துவிட்டோம் என்று வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று தற்குறி போல், எங்களுடைய அரசியல் அனுபவம் கூட இல்லாத, எங்களுடைய உயிரினும் மேலான தலைவர் அவர்கள் மிசா கொடுமையைச் சந்தித்தபோது இந்த மண்ணிலேகூட ஜீவிக்காத ஒரு தற்குறி அமைச்சரின் கூற்றையெல்லாம் தமிழ்நாடு மக்கள் உற்றுநோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜனநாயகம் என்று வருகின்ற பொழுது ஜனநாயகத்தைக் காக்கின்ற முதலமைச்சராக எங்கள் முதலமைச்சர் இருந்தார். ஜனநாயகப் படத்தில் உட்கார்ந்து கொண்டு கண்ணீர் சிந்துகின்ற அமைச்சர்கள் அவருடைய ஆட்சியில் இல்லை. மக்களின் ஆட்சி, மக்களின் நாயகர் எங்கள் முதலமைச்சர் என்பதை அடுத்து எப்போது தேர்தல் வந்தாலும் மக்கள் நிரூபிப்பார்கள்.

கேள்வி: தி.மு.க. ஆட்சியில் நிறைய ஊழல் நடந்திருக்கிறது. அதையெல்லாம் நாங்கள் வெள்ளை அறிக்கையாக தாக்கல் செய்யப் போகிறோம் என்கிறார்களே?

பதில்: எப்பொழுதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் ஆன்மீகத்திற்கு எதிரான இயக்கம் இது என்று ஒரு பெயரை இயற்கையாகச் சூட்டுவார்கள். அந்த பிம்பத்தை அடித்து நொறுக்கி ஒழித்தவர் எங்கள் திராவிட மாடல் ஆட்சியின் நாயகன்.

அவர் காலத்தில்தான் 4,700 திருக்கோவில் களுக்குக் குடமுழுக்கு நடந்துள்ளது. ராஜராஜ சோழனுக்குப் பிறகு அதிகக் குடமுழுக்குகளைக் கண்ட ஒரு மாமன்னன் எங்களுடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். 8,700 கோடி ரூபாய்க்கும் மேலாக நிலங்களை மீட்டவர் எங்கள் முதலமைச்சர். 17 திருக்கோவில்களில் அன்னதானத் திட்டத்தைக் கொண்டு வந்து, ஆண்டிற்கு மூன்றரை கோடி மக்களுக்கு இறைப்பசியோடு சேர்த்து வயிற்றுப் பசியையும் தீர்த்தவர் எங்கள் முதலமைச்சர்.

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். வெள்ளை அறிக்கையோ, கருப்பு அறிக்கையோ, மஞ்சள் அறிக்கையோ, சிவப்பு அறிக்கையோ வெளியிடட்டும். சட்டமன்றத்தில் அதை எதிர்கொள்ள இந்து சமய அறநிலையத்துறை அமைச்சராக இருந்தவன் என்ற முறையில், தளபதி அவர்களின் ஏவுகணையாக நிச்சயமாக அதற்குப் பதில் கூறுவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எத்தனை கேள்விக்கணைகள் வந்தாலும் அப்பழுக்கற்ற, ஒரு தூய்மையான, கடல் நீரைப் போன்று, மழைத் துளிகளைப் போன்று, பசுவின் கறந்த பாலைப் போன்று தூய்மையான ஆட்சி நடந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை, அவர்கள் கேள்விக்கணை தொடுக்கும் போது எங்களுடைய பதில்கணை அதற்குப் பதிலாக அமையும்.

இவ்வாறு - முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்.

தென் சென்னை முன்னாள் மாவட்ட செயலாளர் நினைவில் வாழும் சைதை கா. கிட்டு 15 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர் மேனாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (3-8-2026) அவருடைய படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் பகுதி கழக செயலாளர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சைதை சாதிக், மணிகண்டன் நாடிமுத்து உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு

திருவள்ளூர் மத்திய மாவட்டம் முழுவதும் நினைவு நாள் நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும்!

மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!

திருவள்ளூர், ஆக. 4;- முத்தமிழறிஞர், சமூகநீதியின் காவலர், பகுத்தறிவுப் பகலவன், தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மக்கள் நல ஆட்சிக்கு புதிய பரிமாணத்தை உருவாக்கிய கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, வரும் ஆகஸ்ட் 7ஆம் தேதி திருவள்ளூர் மத்திய மாவட்டம் முழுவதும் நினைவு நாள் நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும் என்று திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழர் வரலாற்றில் என்றும் அழியாத இடத்தைப் பெற்ற மாமனிதர். அவரது அரசியல் வாழ்வும், இலக்கியப் பங்களிப்பும், சமூகநீதிக்கான இடையறாத போராட்டங்களும், தமிழ்மொழி வளர்ச்சிக்காக ஆற்றிய அரும்பணிகளும் தலைமுறைகள் கடந்தும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றன. கல்வி, சமூகநீதி, இடஒதுக்கீடு, பெண்கள் முன்னேற்றம், விவசாயிகள் நலன், தொழிலாளர் உரிமைகள், உள்ளாட்சி அமைப்புகளின் வலிமை, தமிழ்மொழி வளர்ச்சி, தமிழர் பண்பாட்டு பெருமை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் வரலாற்றுச் சாதனைகளைப் படைத்து தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்ற பெருந்தலைவர் கலைஞர். அவர் உருவாக்கிய மக்கள் நலத் திட்டங்களும், சட்டங்களும், கொள்கைகளும் இன்றளவும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான உறுதியான அடித்தளமாக விளங்கி வருகின்றன.

எனவே, அவரது நினைவு நாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் உள்ள அனைத்து மாநகர, நகர, பகுதி, ஒன்றிய, பேரூர், ஊராட்சி, வார்டு, கிளைக் கழகங்கள் மற்றும் அனைத்து அணிகளும் தங்களது பகுதிகளில் நினைவு நாள் நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.

ஒவ்வொரு பகுதியிலும் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துதல், அமைதி அஞ்சலி நிகழ்ச்சிகள், பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், அன்னதானம், இரத்ததான முகாம்கள், மரக்கன்றுகள் நடுதல், மாணவ-மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல் உள்ளிட்ட மக்கள் நலப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். மேலும், கலைஞர் அவர்கள் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்திய சமூகநீதி, சுயமரியாதை, சமத்துவம், பகுத்தறிவு, மதச்சார்பின்மை, மொழி உரிமை ஆகிய உயரிய கொள்கைகளை பொது மக்களிடம் எடுத்துரைக்கும் நிகழ்ச்சிகளும் நடத்தப்பட வேண்டும்.

இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு உயர்வதற்கான வலுவான அடித்தளத்தை அமைத்தவர் கலைஞர். எனவே, கலைஞரின் நினைவு நாளை வெறும் அஞ்சலி நாளாக மட்டுமின்றி, அவரது இலட்சியங்களை வாழ்விலும், மக்கள் பணியிலும் தொடர்ந்து செயல்படுத்த உறுதியேற்கும் நாளாக ஒவ்வொரு கழகத்தினரும் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆகையால், திருவள்ளூர் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், முன்னாள் மற்றும் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், முன்னோடிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், தொண்டர்கள் அனைவரும் தங்களது பகுதிகளில் பெருந்திரளாகப் பங்கேற்று, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை மக்கள் நலப் பணிகளுடன் எழுச்சியோடு அனுசரிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஜி.ஆர்.ராஜேந்திரன் தலைமையில்

மயிலை மேற்குப் பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. அறிக்கை!

சென்னை, ஆக. 4- சென்னை தென் மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி கழக ஆலோசனை கூட்டம் சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு ஆலோசனைபடி மயிலை மேற்கு பகுதி அவைத் தலைவர் ஜி.ஆர். ராஜேந்திரன் தலைமையில் பகுதி துணைச் செயலாளர்கள் ஆர்.எல்.வி. அசோக்குமார், பா பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன், பகுதி பொருளாளர் ஜி.முருகையன் முன்னிலையில் வட்ட கழக செயலாளர்கள் டி. ராஜவேலு, சீ.கிருஷ்ண மூர்த்தி, எஸ் ஆர் ராஜா சுரேஷ்குமார், ஆ நாகராஜன், மூ.இ.ஏழுமலை, மூ.இராஜேந்திரன் வரவேற்பில் இன்று (4/8/2026- செவ்வாய்கிழமை) மாலை 6:00 மணியளவில் 121 வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: ஆகஸ்ட் 7ஆம் தேதி முத்தமிழர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் மற்றும் கழக ஆக்க பணிகள்

இவ்வாறு மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி. அறிக்கை விடுத்துள்ளார்.

மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் அறிவிப்பு!

சென்னை, ஆக.4- மதுரவாயல் வடக்குப் பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இன்று (04/08/2026) செவ்வாய் கிழமை மாலை 5.00 மணி அளவில் பகுதி கழக அலுவலகத்தில் (நொளம்பூரில்) பகுதி கழக அவைத்தலைவர் ஆர். கர்ணல் தலைமையில், பகுதி கழக நிர்வாகிகள் ஆ.மாலினி, தீ. பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ், ம. உதயகுமார் ஆகியோரின் முன்னிலையில் பகுதி கழக ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி கழகத்திற்கு உட்பட்ட வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் விழா.
2. கழக ஆக்க பணிகள்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தலைமையில்

மயிலை கிழக்கு - 124 'அ' வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு அறிக்கை!

சென்னை, ஆக 4- சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு அறிவுறுத்தலின்படி மயிலை கிழக்குப் பகுதி செயலாளர் எஸ்.முரளி தலைமையில் இன்று (04.08.2026) மாலை 6 மணி அளவில் மயிலாப்பூர் தாட்சி அருணாச்சலம் தெரு டோப்பா சாமி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

எனவே இக்கூட்டத்திற்கு 124வது அ வட்ட கழகத்தை சார்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணிகளில் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சி மற்றும் கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு 124 வது அ வட்ட பொறுப்பாளர் மா.பா.அன்பு அறிக்கை விடுத்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவுநாள் ! சென்னை தென்மேற்கு மாவட்டம்

தியாகராயர் நகர் கிழக்கு - மேற்குப் பகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர்கள் கே. ஏழுமலை எம்.சி., கோ.சு.மணி அறிக்கை !

சென்னை, ஆக.4- சென்னை மேற்கு மாவட்ட தியாகராயர் நகர் கிழக்கு - மேற்குப் பகுதிச் செயலாளர்கள் கே. ஏழுமலை எம்.சி.,, கோ. சு. மணி ஆகியோர் விடுத்தள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு மேற்கு பகுதி திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று 04.08.2026 செவ்வாய்கிழமை மாலை 6.00 மணி அளவில் மேற்கு மாம்பலம் எல்லையம்மன் கோவில் தெரு, சந்திர சேகர் திருமண மண்டபத்தில் பகுதி அவை தலைவர்கள் மு. மணிவண்ணன், ராமகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் கூட்டம் நடைபெற உள்ளது.

எனவே, தொகுதிக்கு உட்பட்ட மாநில மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், அணைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் , வட்ட கழக செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட கழக உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் வட்டக்கழக நிர்வாகிகள் ஆற்றல் மிக்க இளைஞர் அணி தோழர்கள், வீரம் மிக்க மகளிர் அணி வீராங்கனைகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்க தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே. ஏழுமலை. எம்.சி., தியாகராயர் நகர் கிழக்கு பகுதி பொறுப்பாளர் கோ. சு. மணி ஆகியோர் கேட்டுக்கொள்கிறார்கள்.

பொருள் : 07.08.26 முத்தமிழர் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் முன்னிட்டு நடைபெறும் அமைதிப் பேரணி குறித்து. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு தியாகராயர் நகர் கிழக்கு - மேற்குப் பகுதிச் செயலாளர்கள் கே. ஏழுமலை எம்.சி.,, கோ. சு. மணி அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

சென்னை மேற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

சென்னை மேற்கு மாவட்ட கழக ஆலோசனை கூட்டம் இன்று (04.08.2026) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அளவில் மாவட்ட கழகம் அமைந்துள்ள எண்.20/32 காம்தார் நகர் முதல் தெரு நுங்கம்பாக்கம் சென்னை-600034-ல் மாவட்ட அவைத்தலைவர் து.விக்டர் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.

ஆகவே கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட பகுதிக் கழகச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

1. கழக ஆக்கப் பணிகள்

நே.சிற்றரசு

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

மாதவரம் வடபெரும்பாக்கம் பகுதியில் மின்சாரம் துண்டிப்பு – ஆபத்தான நிலையில்

உடைந்து தொடங்கும் மின்சாரப் பெட்டிகள் - த.வெ.க. அரசின் மீது மக்கள் புகார்!

புழல் எம். நாராயணன் பொதுமக்களுடன் இணைந்து தீர்வு !

மாதவரம், ஆக 4- சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி 17வது வட்டம் வடபெரும்பாக்கம் பகுதிகளில் எட்டு மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் பொதுமக்கள் கடும் அவதிக்கு உள்ளானார்கள்.

சென்னை மாதவரம் தொகுதி, மணலி மண்டலம் 17வது வார்டு வடபெரும்பாக்கம் அருகே புழல் யூனியன் சாலையில் அமைந்துள்ள பெருமாள் கோயில் தெரு, கன்னியம்மன் நகர் மற்றும் 300க்கும் மேற்பட்ட குடியிருப்பு பகுதிகளில் சில தினங்களாக இரவில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருவதால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளானார்கள். குறிப்பாக குழந்தைகள், நோயாளிகள் ஆகியோர் இரவில்

தூங்க முடியாமல் வெளியே வந்து வீட்டு வாசலில் போக்குவரத்து செல்லும் சாலையில் அமர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இது தவிர இந்த பகுதியில் மின்சார பில்லர்கள் பழுதடைந்தும், உடைந்தும், திறந்தும் காணப்படுகிறது. இதில் உள்ள இணைப்புகள் எல்லாம் பெயர்ந்து காணப்படுவதால் அடிக்கடி மின் துண்டிப்பு ஏற்படுகிறது. இதனால் மின்சார பில்லர்களை சரி செய்ய வேண்டும் என்று பொதுமக்கள் வடபெரும்பாக்கம் மின் வாரிய அதிகாரிகளுக்கு பலமுறை புகார் தெரிவித்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிலையில் நேற்று இரவு மேற்கண்ட பகுதி முழுவதும் சுமார் 8 மணி நேரம் மின்சாரம் இல்லாமல் பொதுமக்கள் கடும் அவதிப்பட்டனர். இந்த தகவலை அறிந்த மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் அவர்கள் கழக நிர்வாகிகளுடன் சம்பவ இடத்திற்கு சென்று மேற்படி பகுதியில் உள்ள மின் சார பில்லர்களை பார்வையிட்டு, அதில் வயர்கள் விடுபட்டுள்ளதை மின்வாரிய அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார். இதை அடுத்து இன்று விடியற்காலை மின்சார வாரிய ஊழியர்கள் வந்து பின்னரில் உள்ள வயரை சரி செய்து மின் இணைப்பை வழங்கினார்கள்.

பொதுமக்கள் கூறுகையில் கடந்த இரண்டு மாதங்களாக அடிக்கடி மின் துண்டிப்பு ஏற்படுகிறது. இது குறித்து அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் போனை எடுப்பதில்லை. நேரில் சென்று புகார் அளித்தாலும் நடவடிக்கை எடுக்காமல் அலைக்கழிக்கின்றனர். அதிகப்படியான மின் கட்டணம் செலுத்தியும் சீராக மின்சாரம் கிடைக்காமல் அவதிப்பட்டு வருகிறோம்.வட பெரும்பாக்கம் பகுதியில் அடிக்கடி மின் துண்டிப்பு ஏற்படுவதை தடுக்கவும் பொதுமக்களின் புகார்களுக்கு செவி சாய்க்காத அதிகாரிகள் மீது உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தொடர்ந்து இதுபோன்று மின்தடை ஏற்படும் பட்சத்தில் இந்த அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

17-வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.